# JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)

**College with Potential for Excellence**
**Reaccredited (3rd cycle) with 'A' Grade by NAAC**
**(Affiliated to Bharathidasan University)**
**TIRUCHIRAPPALLI – 620 020.**

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

## PRESS RELEASE

**Date: 06/01/2019**

The Annual Graduation Day function of Jamal Mohamed College (Under Graduate & M.Phil. Courses – Men), Tiruchirappalli was held on 06.01.2019 (Sunday) at 3.00 p.m. Dr. S. Ismail Mohideen, the Principal delivered the welcome address. Mr. Tenkasi S Jawahar, IAS, Principal Secretary / Commissioner, Treasuries & Accounts, Government of Tamil Nadu, graced the occasion as chief guest and distributed degrees to the graduates. Totally 1409 graduates, (Aided UG-542, SF-UG-755, M.Phil.-112) were conferred with degrees. Tenkasi Mr. S. Jawahar, in the Graduation Day Address, pointed out that, the young graduates should feel proud and blessed to graduate from an esteemed institution, which is secular and imparts quality and value based education. Further, he added that, the young graduates should put in proper use, all the imbibed values like honesty, nobility, ability, sincerity, integrity, morality, humility and modesty, which will elevate them as good personalities. He also emphasized that students should face all the challenges with positive attitude and should deal with success and failure equally. He also insisted the students to be adventurous and spontaneous in this 'Software Civilization'. The Chief Guest also rightly pointed out the importance of living with a good will behaviour and a careful choice of words to glorify the society and Nation. Hajee. M.J. Jamal Mohamed Bilal, President, Dr. A.K. Khaja Nazeemudeen, D.Litt., (USA), Secretary and Correspondent, Hajee. M.J Jamal Mohamed, Treasurer, Dr. K. Abdus Samad, Assistant Secretary, Management Committee members, Controller of Examinations, Directors, Dr. A. Mohamed Ibraheem, Vice-Principal, Dr. M. Mohamed Sihabudeen, Additional Vice-Principal, Alumni of the college, Professors and parents graced the occasion and made it a grand success.

**PRINCIPAL**

# ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)

ரேஸ் கோர்ஸ் சாலை, காஜா நகர், திருச்சிராப்பள்ளி – 20.


= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

<u>**பத்திரிகைச் செய்தி**</u> நாள் : 06.01.2019

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் ஆண்கள் பிரிவிற்கான பட்டமளிப்பு விழா இன்று (06.01.2019 – ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் கல்லூரி குளிர்மைக் கலை அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர். எஸ் இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வழாவிற்கு சிறப்பு விருந்தினராக, தமிழக கருவூலம் மற்றும் கணக்கு பதிவுத்துறை, முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், தென்காசி திரு. எஸ். ஜவஹர், இ.ஆ.ப. அவர்கள் அவர்கள் கலந்து கொண்டு இளநிலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார். அதில் “இன்று பட்டம் பெறும் நீங்கள், மதச்சார்பற்ற பெருமை மிகுந்த இக்கல்லூரியில் பயின்றதை நினைத்து பெருமை கொள்ள வேண்டும். இளம் பட்டதாரிகளாகிய நீங்கள் இங்கு கற்றுக் கொண்ட மதிப்புமிக்க பண்புகளான நேர்மை, உன்னதத்தன்மை, திறமை, கடமை-தவறாமை, ஒற்றுமை, அறநெறி, பணிவு மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றை கைக்கொண்டு, அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி தங்களை நல்ல ஆளுமை மிக்கவர்களாக அமைத்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார். மேலும், நேர்மறை சிந்தனையுடன் சவால்களை எதிர்கொண்டு, வெற்றி-தோல்வியை சமமாக கருத வேண்டும் என கூறினார். நீங்கள் மென்பொருள் மேம்பாடு மிக்க நாகரீக உலகில் சாகசமிக்கவர்களாகவும், சிறந்த தன்னியல்பு கொண்டவர்களாகவும் திகழ வேண்டும். சமூகம் மற்றும் தேச செழிப்பிற்கும், வளர்ச்சிக்கும் பங்காற்றும் வகையில், நல்லெண்ண நடத்தைக் கொண்டவர்களாகவும் சரியான சொற்களை பிரயோகித்து வாழ வேண்டுமென அறிவுறுத்தினார்.” இளநிலை அரசு உதவி பெறும் பிரிவில் 542 பேரும், சுயநிதிப் பாடப்பிரிவில் 755 பேரும், ஆய்வியல் நிறைஞர் (M.Phil) படிப்பில் 112 பேரும், என மொத்தமாக 1,409 மாணவர்கள் பட்டம் பெற்றனர். முன்னதாக, கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில், கல்லூரியின் தலைவர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது பிலால், தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது, உதவிச் செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி கருவூல அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், இயக்குநர்கள், துணை முதல்வர் ஏ.முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் எம்.முகமது சிஹாபுதீன், முன்னாள்-இந்நாள் மாணவர்கள், பெற்றோர்கள், பேராசிரியப் பெருமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

முதல்வர்


JAMAL MOHAMED COLLEGE
(Autonomous)
College with Potential for Excellence


JAMAL MOHAMED COLLEGE
(Autonomous)